டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்

மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 8.8.2023 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 44 - Madurai | Online Edition

# நெசவாளர்களின் பணிகளை எளிதாக்க அரசு முன் முயற்சிகளை எடுத்து வருகிறது

## கைத்தறி தினக் கொண்டாட்ட நிகழ்வில் பிரதமர் பேச்சு

புது தில்லி, ஆக.7

புதுதில்லி, பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கைத்தறி தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப் பட்ட 'ஜவுளி மற்றும் கைவினைப்பொருட்களின் களஞ்சியம்' என்ற தளத்தை தொடங்கி வைத்தார். கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த பொருட்களை பார்வையிட்ட பிரதமர், நெசவாளர் களுடன் கலந்துரையாடினார்.

கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், பாரத் மண்டபத்தின் திறப்பு விழா நடைபெறுவதற்கு முன்பு பிரகதி மைதானத்தில் நடை பெற்ற கண்காட்சியில் கண்காட்சியாளர்கள் தங்கள் தயாரிப்பு களை ஒரு கூடாரத்தில் காட்சிப்படுத்தியதை நினைவு கூர்ந்தார். இந்தியாவின் கைத்தறித் தொழிலின் சிறப்புகளை எடுத்துரைத்த பிரதமர், பழைய மற்றும் புதியவற்றின் சங்கமம் இன்றைய புதிய இந்தியாவை வரையறுக்கிறது என்றார். இன்றைய இந்தியா உள்ளூர் பொருட்களுக்கு உத்வேகம் அளிப்பதோடு மட்டு மல்லாமல், அதை உலகளவில் எடுத்துச் செல்வதற்கான தளத்தையும் வழங்குகிறது என்று அவர் கூறினார். இன்றைய நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு நெசவாளர்களுடனான தமது உரையாடல்கள் குறித்து பேசிய பிரதமர், பிரமாண்ட கொண்டாட் டங்களில் நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு கைத்தறிக் குழுவினர் இருப்பதைக் குறிப்பிட்டு அவர்களை வரவேற்றார்.

'ஆகஸ்ட் மாதம் 'கிராந்தி' மாதம்' என்று பிரதமர் குறிப்பிட்டார். இந்தியாவின் சுதந்திரத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு தியாகத்தையும் நினைவுகூர வேண்டிய நேரம் இது என்று அவர்

கூறினார். சுதேசி இயக்கம் குறித்துப் பேசிய பிரதமர், அது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஜவுளிகளை புறக்கணித்ததோடு நின்றுவிடாமல், இந்தியாவின் சுதந்திரப் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளித்தது என்று கூறினார். அந்த இயக்கம் நெசவாளர்களை மக்களுடன் இணைக்கும் இயக்கம் என்றும், அந்த இயக்கம் தொடங்கப்பட்ட இந்த நாளை தேசிய கைத்தறி தினமாக அரசு தேர்ந்தெடுத்ததன் காரணம் இதுதான் என்றும் அவர் கூறினார். கடந்த சில ஆண்டுகளில், கைத்தறித் தொழில் மற்றும் நெசவாளர்களின் வளர்ச்சிக்காக முன்னெப்போதும் இல்லாத வகையில் பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதை பிரதமர் சுட்டிக் காட்டினார். சுதேசி குறித்து நாட்டில் ஒரு புதிய புரட்சி ஏற்பட்டுள்ளது என்று திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். நெசவாளர்களின் சாதனைகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றி குறித்து அவர் பெருமிதம் தெரிவித்தார்.

ஒருவரின் அடையாளம் அவர்கள் அணியும் ஆடைகளுடன் தொடர்புடையது என்பதை என்று கூறிய பிரதமர், இந்த நிகழ்ச்சியில் காணக்கூடிய மாறுபட்ட ஆடை வகைகளை எடுத்துரைத்தார். இந்தியாவின் பன்முகத்தன்மையை பல்வேறு பகுதிகளின் ஆடைகள் மூலம் கொண்டாடுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இது என்று அவர் கூறினார். இந்தியா ஆடைகளின் அழகான பலவகைகளையும், வண்ணங்களையும் கொண்டு உள்ளது என்று கூறிய பிரதமர், தொலைதூரப் பகுதிகளில் உள்ள பழங்குடி சமூகங்கள் தொடங்கி, பனி படர்ந்த மலைகளில் வாழும் மக்கள், கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் முதல் பாலைவனத்தில் வசிப்பவர்கள் வரை ஆடைகளில் பன்முகத் தன்மை இருப்பதாகத் தெரிவித்தார். இந்தியாவின் பல்வேறுபட்ட ஆடைகளை பட்டியலிட்டு தொகுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், இன்று ‘ஜவுளி மற்றும் கைவினைப் பொருட்களின் களஞ்சியம்’ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்தியாவின் ஜவுளித் தொழில் கடந்த பல நூற்றாண்டுகளைக் கொண்டது என்று குறிப்பிட்ட பிரதமர், சுதந்திரத்திற்குப் பிறகு அதை வலுப்படுத்த உறுதியான முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட வில்லை என்று தெரிவித்தார். கதர்துறைகூட கண்டுகொள்ளப் படாமல் விடப்பட்டது என்று அவர் கூறினார்.

கதர் அணிந்தவர்கள் இழிவாகப் பார்க்கப்பட்டனர். இந்நிலையில், மனதின் குரல் உரை நிகழ்ச்சியின் தொடக்கக் கட்டத்தில் கதர் பொருட்களை வாங்குமாறு மக்களை தாம் வலியுறுத்தியதை பிரதமர் நினைவு கூர்ந்தார். இதன் விளைவாக கடந்த 9 ஆண்டுகளில் கதர் உற்பத்தி 3 மடங்கு அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். கதர் ஆடைகளின் விற்பனை 5 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், வெளிநாடுகளிலும் அதன் தேவை அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். தமது பாரிஸ் பயணத்தின் போது ஒரு பெரிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியை சந்தித்ததையும் மோடி நினைவு கூர்ந்தார். அவர் கதர் மற்றும் இந்திய கைத்தறி மீது அதிகரித்து வரும் ஈர்ப்பு குறித்து தெரிவித்ததாக பிரதமர் கூறினார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு கதர் மற்றும் கிராமத் தொழில்களின் விற்பனை சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாயாக மட்டுமே இருந்தது. ஆனால் தற்போது அது ஒரு லட்சத்து முப்பதாயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது என்று கூறினார். இதன் மூலம் ரூ.1 லட்சம் கோடி கிராமங்களில் உள்ள கைத்தறித் துறையுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். கடந்த 5 ஆண்டுகளில் 13.5 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர் என்று நித்தி ஆயோக் அறிக்கையை மேற்கோள் காட்டிய பிரதமர், இதற்கு அதிகரித்து வரும் மக்களின் வருவாய்தான் காரணம் என்று கூறினார். உள்ளூர் பொருட்களுக்கு ஊக்கமளிப்போம் என்ற உணர்வோடு மக்கள் முழு மனதுடன் உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குகிறார்கள் எனவும் இது ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது என்றும் மோடி கூறினார். வரவிருக்கும் ரக்ஷா பந்தன், கணேஷ் உத்சவ், தசரா மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு ஆதரவளிக்கும் சுதேசி தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஜவுளித் துறைக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் சமூக நீதிக்கான முக்கிய சாதனமாக மாறி வருவதாக தெரிவித்த பிரதமர், நாடு முழுவதும் கிராமங்கள் மற்றும் நகரங்களில் லட்சக்கணக்கான மக்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார். இவர்களில் பெரும்பாலோர் பட்டியலின, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின சமூகங்களைச் சேர்ந்த

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

வர்கள் என்று குறிப்பிட்ட அவர், அரசின் முயற்சிகள் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் வழிவகுத்துள்ளன என்று கூறினார். மின்சாரம், குடிநீர், எரிவாயு போக்குவரத்து, தூய்மை இந்தியா போன்ற திட்டங்களை எடுத்துக்காட்டாகக் கூறிய அவர், இதுபோன்ற திட்டங்களால் பின்தங்கிய மக்கள் அதிகபட்ச பலன்களைப் பெற்றுள்ளனர் என்று கூறினார். இலவச உணவு தானியங்கள், பாதுகாப்பான வீடு, ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை- இது இந்த மோடியின் உத்தரவாதம் என்று கூறிய பிரதமர், அடிப்படை வசதிகளுக்காக நெசவாளர் சமூகத்தினர் பல ஆண்டு காலம் காத்திருந்ததற்கு தற்போதைய அரசு முற்றுப் புள்ளி வைத்துள்ளது என்று கூறினார்.

இந்திய ஜவுளித்துறையுடன் தொடர்புடைய மரபுகளை உயிர்ப்புடன் வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல், உலகை ஈர்க்கவும் அரசு பாடுபடுகிறது என்று பிரதமர் கூறினார். கடந்த 9 ஆண்டுகளில் 600-க்கும் மேற்பட்ட கைத்தறிக் குழுமங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், ஆயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் மோடி தெரிவித்தார்.



கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் உள்ளிட்ட மூலப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதுடன், மூலப் பொருட்களை கொண்டு செல்வதற்கான செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது என்று தெரிவித்தார். முத்ரா கடன் திட்டத்தைக் குறிப்பிட்ட பிரதமர், நெசவாளர்களுக்கு இப்போது உத்தரவாதம் இல்லாமல் கடன் பெறுவது சாத்தியமாகி உள்ளது என்றார்.

மேலும், 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' என்ற திட்டம் குறித்து பேசிய பிரதமர், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பு தயாரிப்புகள் ஊக்குவிக்கப்படுகின்றன என்றார். இதுபோன்ற தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக நாட்டின் ரயில் நிலையங்களில் சிறப்பு அரங்கங்கள் அமைக்கப்படுகின்றன என்று அவர் கூறினார். கைத்தறித் துறையுடன் தொடர்புடைய வர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒவ்வொரு மாநிலத்தி லிருந்தும் மாவட்டத்திலிருந்தும் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகளை ஒரே குடையின் கீழ் ஊக்குவிக்க மாநிலங்களின் தலைநகரங்களில் அரசால் உருவாக்கப்பட்டு வரும் ஏக்தா மால் எனப்படும் விற்பனை நிலையங்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டார். ஒற்றுமை சிலையில் உள்ள ஏக்தா மாலையும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். இது சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தியாவின் ஒற்றுமையை உணரவும், ஒரே குடையின் கீழ் பல்வேறு மாநிலங்களின் பொருட்களை வாங்கவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது என்று அவர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக மூவர்ணக் கொடியை நெசவு செய்வதில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்களுடனான தனது கலந்துரையாடலை பிரதமர் எடுத்துரைத்தார். மூவர்ணக் கொடியை இல்லம்தோறும் ஏற்றி மீண்டும் 'ஹர் கர் திரங்கா' என்ற இல்லம்தோறும் தேசியக் கொடி இயக்கத்தை கொண்டாடு மாறு அவர் மக்களை வலியுறுத்தினார். வீடுகளின் மேற்கூரை களில் மூவர்ணக் கொடி ஏற்றப்படும்போது, அது நமக்குள்ளும் பறக்கும் என்று கூறி பிரதமர் நரேந்திர மோடி தமது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய ஜவுளித் துறை இணையமைச்சர் தர்னா ஜர்தோஷ், மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை அமைச்சர் நாராயண் ரானே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

AGRIYA

# பயோ கம்போஸ்டர்

## மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவை




## உபயோகியுங்கள்

பயோ கம்போஸ்டர் பண்ணைக் கழிவுகளையும், நகர குப்பைக் கழிவுகளையும் முழுமையாக மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவையாகும்.

பயோ டெக்னாலஜி முறையில் தயாரிப்பதால் இது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு தீங்கு விளைவிக்காது.

**LINGA CHEMICALS**

Customer Care: 0452 - 2321722

# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மழை

சென்னை, ஆக.7

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக வரும் 9.8.23 வரையில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 10 மற்றும் 11ம் தேதிகளில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 12 மற்றும் 13ம் தேதிகளில், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியசை ஒட்டியே இருக்கக்கூடும். அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியசை ஒட்டியே இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், இன்று தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகளைப் பொறுத்தமட்டில், இன்று மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத் திலும் வீசக்கூடும். நாளை 9ம் தேதி இலங்கை கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளை பொறுத்தமட்டில், எச்சரிக்கை ஏதுமில்லை.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# சுகத்தை தரும் அகத்தி - ஓர் பார்வை



அகத்தி, செடி முருங்கை, கருவேப்பிலை, புதினா, தூது வளை போன்றவை மிகவும் முக்கியமான கீரை வகைகள். பொதுவாக கீரை வகைகள் நம் உடலில் ஏற்படும் சரும பிரச்சனைகளுக்கும் உடலில் இருக்கும் சத்து குறைபாடுகளுக்கும் ஒரு சிறந்த உணவாகும். நாம் மட்டுமின்றி நமது கால்நடைகளுக்கும் இந்த வகை கீரைகளைச் சிறந்த உணவாகக் கொடுக்க முடியும்.

அகத்திக்கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் நம் உடலில் ஏற்படும் தேவையற்ற அரிப்புகள் நீங்கும். வயிற்றில் உண்டாகும் புழுக்களை அழிக்கும். மேலும் தாய்ப்பாலை அதிகரிக்க செய்யும், மிக முக்கியமாக நமது வாய்ப் புண்ணை நீக்கும் குணம் கொண்டது இந்த அகத்திக்கீரை. அகத்திக்கீரை ஆங்கிலத்தில் செஸ்பேனியா கிரான்டிஃபோளோரா (Sesbania grandiflora) என்று அழைக்கப்படுகிறது.

அகத்தி இலை, உடலில் இருக்கும் நச்சுத்தன்மையை நீக்கும் வல்லமை கொண்டது. இதனால் வாரம் ஒரு முறை மட்டுமே கால்நடைகளுக்கு தீவனத்தில் கலந்து கொடுக்க வேண்டும். நாமும் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் இருமுறையோ எடுத்துக் கொள்வது, நமது உடல்நலத்தை பாதுகாக்க உதவும். அகத்திக்கீரையில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து போன்றவை மிக அதிகளவில் உள்ளது.

அகத்திக்கீரையானது கால்நடைகளுக்கும் ஒரு மிகச்சிறந்த உணவாக இருக்கும். இந்த அகத்தியை ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, பன்றி பண்ணை போன்ற பண்ணைகளில் வளர்த்து விலங்கு களுக்கு கொடுக்கலாம். அவ்வாறு கொடுக்கும் பொழுது அகத்தியின் முதிர்ந்த இலைகளை விலங்குகளுக்கும், இளம் இலைகளை நாமும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## அகத்திக்கீரை விதை பெருக்கம்

அகத்திக்கீரையை விதைகள் மூலமும் வளர்க்க முடியும். அகத்தி செடியில் வெள்ளை மற்றும் சிவப்பு அகத்தி என இரண்டு வகைகள் உள்ளன.

## அகத்திக்கீரை பயிரிடும் முறை

அகத்திக்கீரையை ஒரு அடி முதல் 2 அடி இடைவெளியில் வரிசையாக விதைத்து வளர்க்கலாம். அகத்திக்கீரையை வேலி ஓரங்களிலும் பயிரிடலாம். அகத்திக்கீரை மரமாக வளரும் வகையைச் சேர்ந்தது.

எனவே 3 முதல் 4 அடி இருக்குமாறு புதர் போல் வளர்த்து வருவதன் மூலம் அறுவடை செய்வது மற்றும் பராமரிப்பது போன்றவை மிக எளிதாக இருக்கும். இதனால் அதன் நுனியை உடைத்து நாம் பராமரிக்க வேண்டும். இதிலிருந்து கிடைக்கும் இலை மற்றும் அகத்திப்பூ மிகச் சிறந்த உணவாகும். இதில்




அதிக சத்துக்கள் உள்ளது. மேலும் இது அனைத்து விதமான மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. இவற்றை நாம் மாடித் தோட்டத்தில் தொட்டியிலும் வைத்து வளர்க்கலாம்.

அகத்திக்கீரையை சாகுபடி செய்ய விரும்புவோர் விதை முளைப்புத் திறனை அறிந்து விதைப்பது தேவையான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க உதவும். விவசாயிகள், வேளாண் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் வேளாண் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள அனைத்து வகையான விதைகளின் தரத்தை அறிந்து கொள்ள மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் உள்ள அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில், விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பெரி.இராமலட்சுமி மற்றும் சி.கமலாராணி தெரிவித்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தினம் ஒரு மூலிகை

## கல்யாண முருங்கை




கல்யாண முருங்கை, இதில் இரண்டு வகை உள்ளன. சிவப்பு பூ, வெள்ளை பூ முறையே சிவப்பு கல்யாண முருங்கை, வெள்ளை கல்யாண முருங்கை என அழைக்கப்படுகிறது. இதில் சிவப்பு கல்யாண முருங்கையை பார்ப் போம். அகன்ற இலை களையும், சிவப்பு நிற மலர்களையும், செந்நிற உருட்டு விதைகளையும், முட்கள் கொண்ட மென்மையான மரம். இதை முருக்க மரம் என்றும் கூறுவார்கள். இலை, பூ, பூ விதை, பட்டை மருத்துவ பயன் உடையது. இலை சிறுநீர் பெருக்கி, மலமிளக்குதல், தாய்ப்பால் பெருக்குதல், மாத விலக்கை தூண்டுதல் ஆகிய குணம் உடையது. பூ கருப்பை குறை நீக்கியாகவும், பட்டை கோழை அகற்றி ஜுரம் நீக்கியாக வும், குடற் பூச்சி கொல்லியாகவும் செயல்படும். இலைச்சாறு 10 துளிகள், 10 துளி வெந்நீர் கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க வாந்தியாகி வயிற்றுப்புளிப்பு, கபக்கட்டு, கோழை நீக்கி, பசியும் சிரிப்பு திறனும் உண்டாக்கும். குடல் பூச்சிகள் அகலும். இலைச் சாறு 30 மில்லி பத்து நாட்கள் கொடுக்க மாதவிடாய்க்கு முன் பின் காணும் வயிற்று வலி தீரும். இலைச்சாறு 30 மில்லி வெள்ளை வெங்காயச் சாறு 30 மில்லி அன்னக்கொடி நீருடன் காலை மட்டும் இளம் சூட்டில் உட்கொள்ள நாள்பட்ட இரைப்பு காசம் தீரும்.

தகவல் : ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.



# வெப்ப அலையில் விவசாய பயிர்களை காப்பாற்றும் வழிமுறைகள்?



பொதுவாக கோடை காலத்துல அதிகமாக வெப்பம் (ஏப்ரல், மே) மாதங்களில் அதிகமாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டில் வெயிலின் தாக்கம் இன்று வரை தொடர்ந்து நீடித்து வருகிறது. உச்சி வெயில் மண்டையை பிளக்குது என நாம் அனைவரும் உணர்ந்து வருகிறோம். உச்சி வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் யாரும் பிற்பகல் 12 மணியில் இருந்து 3 மணி வரை வெளியே செல்லக்கூடாது என தமிழக அரசும் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடதக்கது.

## வெப்ப அலை என்றால் என்ன?

வெப்ப அலை என்பது இயல்பான வெப்ப நிலையை விடக் கூடுதலாக 3 டிகிரி C வெப்பம் தொடர்ந்து 3 தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களில் இருந்தால் அந்த நாட்களை வெப்ப அலை நாட்கள் என்கிறோம். தமிழகத்தில் கடந்த 25 ஆண்டுகளில் சாரசரியாக 8 வெப்ப அலை ஏற்பட்டுள்ளதாக வானில் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

இந்த வெப்ப அலையில் விவசாயப் பயிர்கள், தோட்டப் பயிர்கள் மாடித் தோட்ட பயிர்களை பாதுகாக்கும் வழிமுறைகள். என்ன?

1) மாடி தோட்டப்பயிருக்கு தற்காலிக நிழற்பந்தல் (GREEN NET) அமைத்து வெப்ப அலையின் தாக்கத்திலிருந்து தடுக்கலாம்.

2) நீர்ப்பாசனம் காலை/மாலை நேரங்களில் அதுவும் சொட்டு நீர் பாசனம் / தெளிப்பு நீர் பாசனம் பயன்படுத்தலாம். இதனால் நீரின் ஆவியாவதல் தடுக்கப்படுகிறது. இதன் மூலமாக நீரானது செடிகளின் வேரின் தொகுப்பிற்கு நேரடி யாக நீர் செல்லுவதால் வெப்ப அலையால் (ROOT ZONE) பாதிக்காது.

3) வெப்ப அலை உள்ள காலங்களில் பயிர்களுக்கு செடிக்கு அடியில் உரம் இடக்கூடாது. அவ்வாறு இட்டால் கடுமையான வெப்பத்தால் போதுமான தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையில் பயிர்களின் திசு வளர்ச்சி பாதிக்கப்பட்டு பயிர் கருகிவிடும். இந்த

மாதிரியான நேரத்துல இலைவழி தெளிப்பாக உரமிடலாம் தேவைப்பட்டால்.

4) தரையில் (நிலத்தில்) வெப்பத்தின் தாக்கம் அதிகமாகி வருவதை தடுக்க வைக்கோல் கூளம் போன்றவைகளைக் கொண்டு மூடாக்கு போட வேண்டும். இதனால் மண்ணின் ஈரம் ஆவியாவது தடுப்பதுடன் களைகள் முளைக்காது.

5) வெப்ப அலையில் இருந்து தாவரங்களின் பச்சைத்தை பாதுகாக்க ‘மெத்தைலோ பாக்டீரியா‘ (ஊணேஊணய்னி) ஒரு லிட்டர் தண்ணீருக்கு.20மி.லி காலை/ மாலை நேரங்களில் தெளிக்கலாம் இதனால் 10% மகசூல் அதிகமாக கிடைப்பதுடன் வறட்சி யிலிருந்து தப்பிக்கலாம்.

6) வெப்ப அலை மற்றும் நீராவி போக்கினை கட்டுப்படுத்த பயிர்களின் மீது 5% கயோலின் என்ற களி மண்ணை தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனால் வெப்பத் தின் தாக்கம் குறையலாம்.




7) தோட்ட வேலைகளை அதிக காலை அல்லது மாலை நேரங்களில் களை எடுத்தல், பூ பறித்தல் போன்ற பணிகளை செய்யலாம்.

8) கால்நடைகளை மேய்ச்சலை காலை/மாலை நேரங்களில் மேய விடலாம். வெயில் நேரங்களில் வெளியே அனுப்ப க்கூடாது.

இதுபோன்ற வெப்ப அலையில் பயிரை பாதுகாப்பது மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த மாதிரியான நேரத்துல புதிய பயிரை சாகுபடி செய்வதை தவிர்க்க வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# பெருந்துறையில் காங்கேயம் நாட்டுப்பசு கண்காட்சி



ஈரோடு, ஆக.7

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கோவை மெயின் ரோட்டில், பெருந்துறை கருங்காட்டில் 6.8.23 ஞாயிற்றுக்கிழமை காலையில் காங்கேயம் நாட்டுப்பசு கண்காட்சி நடைபெற்றது. சுமார் 350க்கும் அதிகமான காங்கேயம் கன்றுகள், காளைகள், பசு மாடுகள், எருதுகள் கலந்து கொண்டன.

பல் போடாத கிடாரி மற்றும் காளைக் கன்றுகள், 2,4,6 பல் காளை மற்றும் கிடாரிகள், பல் சேர்ந்த, மயிலை, காரி, செவலைப் பசு மாடுகள் என்று வயது நிறம் சார்ந்த காங்கேயம் கால்கடைகள் தேர்வு செய்யப்பட இருந்தது. காரி, செலை, மயிலை பூச்சிக்காளைகள், பசு மாடுகள், எருதுகள், இளம் கன்றுகள் என்று எண்ணற்ற கால்நடைகள் கண்காட்சியில் கலந்து கொண்டன.

ஈரோடு மாட்டத்தினை சார்ந்த சந்தோஷ், தமிழ், செல்வக் குமார், சிவகஞ்சு, பிரகாஷ், பிரபாகரன், சதீஸ்குமார் பசு நேசம் சேகர் ஆகியோர் முன்னின்று இந்தக் கால்நடை கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். காங்கேயம் இனப்பசுக்களை வாங்கி விவசாயிகள் வளர்த்து மக்களின் ஆரோக்கியத்தினைப் பேன ஊக்குவிக்க விழிப்புணர்வு ஏற்படுத்து முகத்தான் இந்த மாதிரி கால்நடை கண்காட்சிகளை நடத்துவதாகக் கூறினார்கள்.

தகவல் : **டாக்டர் கே.வி.கோவிந்தராஜ். Ph.D., கால்நடை ஆராய்ச்சியாளர், ஜெயம் பிராணி நல அறக்கட்டளை, கவுந்தப்பாடி 638 455. அலைபேசி : 98427 04504.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பவானி வட்டாரத்தில் நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

ஈரோடு, ஆக.7

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி தொடர்பான பயிற்சி வைரமங்கலம் கிராமத்தில் 7.8.23 அன்று நடைபெற்றது.

ம.கனிமொழி, வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), பவானி, செம்மை கரும்பு சாகுபடி மற்றும் அதன் நன்மைகள் மற்றும் கரும்பு பயிரில் செம்மை கரும்பு சாகுபடி மற்றும் புதிய இரகங்களை தேர்வு செய்து அதனை பயிரிட்டு அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை கூறினார்.




அமுதா, உதவி பேராசிரியர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் கரும்பு பயிரில் இரக தேர்வு முறைகள் மற்றும் நுட்புழு தாக்குதல் குறித்தும் மற்றும் கரும்பு பயிரில் போக்கபோயின் நோய் தாக்குதல் மற்றும் கரும்பு நுண்ணூட்ட பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் கூறினார்.

சக்தி கரும்பு ஆலை மேலாளார், ஆப்பக்கூடல் கரும்பு பதிவு முறைகள் குறித்து ஆலோசணை கூறினார். க.கண்ணன், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை திட்டங்கள் குறித்து கூறினார்.

பவானி வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் லோ.கங்கா, உழவன் செயலி பதிவேற்றம், இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். நா.பூங்கோதை, உதவி தொழில்நுட்ப மேலாளர் நன்றியுரை கூறினார்.

# வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம்



விருதுநகர், ஆக.7

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை உழவர் மையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் இராமசாமிபுரத்தில் அட்மா விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் 7.8.23 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டாரத்தின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் 25 நபர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்சியில் ரா.பத்மாவதி, வேளாண்மை உதவி இயக்குநர், வரவேற்புரை ஆற்றினார். அட்மா விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் 2023-24ம் நிதியின் கீழ் முதல் தவணை நிதி வரப்பெற்ற விபரம் பற்றி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கா.பெருமாள்சாமி, எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் பா.துர்காதேவி, வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் தி;ட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். கால்நடைத் துறையிலிருந்து சரவணன், கால்நடை மருத்துவர், கால்நடை துறையின் கீழ் செயல்படும் திட்டங்கள் கால்நடைகளை தாக்கும் நோய்கள் தடுப்புமுறை மற்றும் முன்னெச்சரிக்கை முறைகள் தொடர்பாக எடுத்துரைத்தார். தோட்டக்கலைத் துறையிலிருந்து விமல்ராஜ், காய்கறிப் பயிர்களுக்கு குழித்தட்டு நாற்றங்கால் உற்பத்தி மற்றும் அதன் மானிய விபரங்கள் பற்றி எடுத்துரைத்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையிலிருந்து ஜெயப்பாண்டியன், மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்கள் உழவர் உற்பபத்தியாளர் நிறுவனங்கள் தொடர்பாக எடுத்துரைத்தார். மீன் வளத்துறையிலிருந்து போ.டேவிட் ரவி, மீன் வள மேற்பார்வை-யாளர், பண்ணைக்குட்டையில் மீன்வளர்ப்பு அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பாக எடுத்துரைத்தார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஆ.காளீஸ்வரி மற்றும் ரா.சதீஸ்குமார் ஆகியோர் உழவன் செயலி பயன்பாடுகள் மற்றும் பதிவிறக்கம் செய்து விவசாயிகள் தங்களது தேவையை உழவன் செயலியில் பூர்த்தி செய்து முன்னுரிமையின்படி அவர்களது தேவைகள் நிவர்த்தி செய்யப்படும என தெரிவித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை வட்டார விரிவாக்க சீரமைப்பு திட்ட பணியாள்கள் செய்திருந்தனர்.


SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# மண் வள பரிசோதனையில் வேளாண் கல்லூரி மாணவிகள்



கடலூர், ஆக.7

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் G3 குழுவை சார்ந்த மாணவிகள் 16 பேர், பல்கலைக்கழக இணை பேராசிரியர் முனைவர் வி.சக்திவேல் வழிகாட்டுதலின்படி, பரங்கிப்பேட்டை அடுத்த அகரம் கிராமத்தில்




3 மாதங்கள் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி ‘கிராமங்களில் மண் பரிசோதனை ‘ என்னும் திட்டத்தின் கீழ் அகரம் கிராமத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட விளைநிலங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அந்த மாதிரிகள் கடலூர் மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் முடிவுகள் விவசாய பெருமக்களுக்கு தெரிவிக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மண் வளத்திற்கு ஏற்ப பயிர்களை சாகுபடி செய்யவும், தேவையான அளவு உரங்களை இடவும் முடியும்.

# ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.40க்கு விற்பனை



திண்டுக்கல், ஆக.7

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், சாலைப்புதூர், அம்பிளிக்கை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தக்காளி அதிகம் பயிரிடப்படுகிறது. தட்ப வெப்பநிலை மாற்றத்தால் தக்காளி செடிகளில் இருந்து பூக்கள் உதிர்ந்ததால் விளைச்சல் மிகவும் பாதிப்படைந்தது. இதனால் மார்க்கெட்டுக்கு வரத்து கால்பங்காக குறைந்தது.

கடந்த 1 மாதத்துக்கும் மேலாக 1 கிலோ தக்காளி அதிக பட்சமாக கிலோ ரூ.120க்கு விற்பனையானது. கடந்த வாரம் 14 கிலோ தக்காளி பெட்டி ரூ.1500க்கு விற்பனையானது. இந்நிலையில் தற்போது தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் 1 கிலோ தக்காளி ரூ.40க்கு விற்பனையாகிறது. இதனால் பொதுமக்கள், இல்லத் தரசிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



# சேலம் மாவட்டம், ஆத்தூர், உழவர் சந்தை
# 7-8-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.60-65-75 |
| 2. உருளை | ரூ.30-32 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.55-60 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.25-30 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.54-58 |
| 6. கத்தரி | ரூ.35-40 |
| 7. வெண்டைக்காய் | ரூ.20-22 |
| 8. முருங்கை காய் | ரூ.20-30 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.38-40 |
| 10. சுரக்காய் | ரூ.18-20 |
| 11. புடலங்காய் | ரூ.20-24 |






| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.48-50 |
| 13. தேங்காய் | ரூ.20-25 |
| 14. முள்ளங்கி | ரூ.14-16 |
| 15. பீன்ஸ் | ரூ.65-70 |
| 16. அவரை | ரூ.55-60 |
| 17. ஊட்டி கேரட் | ரூ.60-64 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | ரூ.25-30 |
| 20. வாழைப்பழம் | ரூ.30-40 |
| 21. கீரைகள் | ரூ.20- 24 |
| 22. பப்பாளி | ரூ.18-20 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. மாம்பழம் | ரூ.40-50 |
| 25. ஆப்பிள் | இல்லை |
| 26. சாத்துக்குடி | இல்லை |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

# அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க அரசு உத்தரவு

திருப்பூர், ஆக.7

திருப்பூர் மாவட்டம். அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பூர் மாவட்டத்திலுள்ள புதிய பாசன நிலங்களுக்கு அமராவதி பிரதானக் கால்வாய் வழியாக 38016 மில்லியன் கன அடிக்கு மிகாமல் 8.8.23 முதல் 18.8.23 வரை 10 நாட்களுக்கு, நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு சிறப்பு நனைப்புக்கும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும், அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 25,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் எனக் குறிப்பிட்டுள்ளது.



# மண்புழு உரமும் மண்புழு குளியல் நீரும்

மண்புழுக்களை உழவனின் நண்பன், சுற்றுப்புற அமைப் பாளர்கள், ஏரில்லா உழவன் என்றெல்லாம் அழைக்கப்படு கின்றன. சமீப காலங்களில் மண்புழுக்கள் இயற்கையாக நிலத்தில் காணப்படுவது குறைந்தது. காரணம் நாம் பயன் படுத்தும் செயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் செயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள், நில மாசுபாடு மற்றும் நம்முடைய செயல் பாடுகள் ஆகியவை. இன்றைக்கு வேளாண்மையில் மண்புழு உரத்தினைப் பயன்படுத்தி பயிர் செய்து நல்ல விளைச்சலைப் பெறுவது மட்டுமின்றி மண்ணின் வளத்தையும்




மேம்படுத்தலாம். மண்புழுக்கள் உற்பத்திக்கு நிழலுடன், அதிகளவு ஈரப்பதம் மற்றும் குளிர்ச்சியான இடத்தினை தேர்வு செய்ய வேண்டும். திறந்த வெளியில் உற்பத்தி செய்வதாக இருந்தால் நிழலான இடத்தினைத் தேர்வு செய்யவும். வெயில், காற்று மற்றும் மழை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க அதன் மேல் தென்னங்கீற்றைப் பயன்படுத்தலாம்.

மண்புழுக்கள் வளர்க்க தொட்டி வடிவில் அமைப்பதாக இருந் தால் அறையின் அளவிற்கு நீளம் 3 அடி அகலமும், 2 அடி நீளமும் உடைய சிமெண்ட் தொட்டியைப் பயன்படுத்த லாம். முதலில் தொட்டியின் அடிப்பாகத்தில் நெல் உமி, தென்னை நார்க்கழிவு, கரும்புத் தோகை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை 3 செமீ உயரத்திற்கு நிரப்ப வேண்டும். பின் ஆற்று மணலை 3 செமீ உயரத்திற்கு நிரப்ப வேண்டும். அதன் மேல் 3 செமீ உயரத்திற்கு தோட்ட மணலை பரப்ப வேண்டும். இதற்கு மேல் தண்ணீரைத் தெளிக்க வேண்டும்.

மண்புழுவிற்கான உணவுடன் 30 சதவீதம் உலர்ந்த கால்நடைக் கழிவுகளைக் கலந்து தொட்டி முழுவதும் பரப்ப வேண்டும். ஈரப்பதம் 60 சதம் இருக்க வேண்டும். இதன் மேல் மண்புழுவினை கொட்ட வேண்டும்.

1 மீ நீளம் x 1 மீ அகலம் x 0.5மீ உயர அளவிற்கு 2 கிலோ (2000 புழுக்கள்) தேவைப்படும். தினமும் தண்ணீர் கட்டாயம் தெளிக்க வேண்டும். ஈரப்பதம் 60 சதவீதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மண்புழு உர அறுவடைக்கு 2 நாட்கள் முன்னதாக தண்ணீர் தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும்.

மண்புழுக்கள் இட்டு மூன்றாவது வாரத்திலேயே மேற்புறத்தில் எச்சங்களை உரங்களாக தள்ளுகின்றன. இவ்வெச்சங்களை மண்புழுக்கள் தெரியும் இடம் வரை அறுவடை செய்யலாம். மண்புழு உரம் அறுவடைக்கு தயாரானதை அதன் கருப்பு நிறம் கொண்ட மண்வாசனை நிறைந்ததை வைத்து அறுவடை செய்யலாம். மண்புழுக்கள் உரக்குழியிலிருந்து மண்புழுவினைப் பிரித்தெடுக்க சிறிய சாண உருண்டைகளை உரக்குழியில் பல இடங்களில் வைக்க வேண்டும். இதனால் புழுக்கள் சாணத்தால் கவரப்பட்டு உருண்டைக்குள் வருகின்றன. பின் உருண்டை களை நீரில் கரைத்து புழுக்களைப் பிரித்தெடுக்கலாம்.



இந்த புழுக்கள் அடுத்த மண்புழு உரம் தயாரிக்கப் பயன் படுத்தலாம். மண்புழு உரத்தை நேரடியாகவே வயல்களில் பயன்படுத்தலாம். சேமிக்க வேண்டுமென்றால் அறுவடை செய்யப்பட்ட மண்புழு உரத்தை இருட்டான அறையில் 40 சதவீதம் ஈரப்பதத்தில் சூரிய ஒளி படாதவாறு வைக்க வேண்டும். இவ்வாறு வைப்பதால் ஈரப்பதம் வீணாவதை தடுக்கலாம். மக்கிய உரத்தை பாக்கெட் செய்வதை விட திறந்த வெளியில் சேமிப்பது சிறந்தது. திறந்த வெளியில் சேமிக்கும் பொழுது தண்ணீர் தெளித்து ஈரப்பதத்தை காக்க வேண்டும். இதனால் நுண்ணுயிர்கள் அழிவதை தடுக்கலாம். விற்கும் சமயத்தில் மட்டுமே பைகளில் நிரப்ப வேண்டும்.




**நன்மைகள்**

1. மற்ற மக்கும் உரங்களைவிட மண்புழு உரத்தில் தாவரத்திற்கு தேவையான அதிக சத்துக்கள் உள்ளன.

2. மண்புழு உரத்தில் நன்மை தரும் நுண்ணுயிர்கள் அதிகளவில் இருப்பதால் மண்ணின் சூழலை மேம்படுத்து கின்றன.

3. தாவரங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

4. நோய் கிருமிகள் (ம) நோய் ஏற்படுவதைக் குறைக்கின்றன.

5. மழைக்காலங்களில் மண் அரிப்பைத் தடுக்கும்.

6. இவ்வுரம் இடப்பட்ட பயிர் கூடுதலாக 20 முதல் 30 சதவீதம் வரை பயன் தருகின்றன.

7. பயிர்களின் மகசூல் அதிகரித்து வறட்சியைத் தாங்கி வளர வாய்ப்புள்ளது.

**மண்புழு**

உரத்தை போலவே மண்புழு குளியல் நீரும் பயிர்களுக்கு ஊட்டமளிப்பவை. மண்புழு உடலை எப்போதும் ஈரமாகவே வைத்திருக்க வேண்டி அவை வியர்வை போன்ற உடலில் சுருக்கும் திரவத்தையும், எருவில் உள்ள சத்துக்களையும் கழுவிக் கொண்டு கீழே வந்து சேரும். இந்த திரவத்தை சேகரித்து பயன்படுத்தும் உத்தி தான் மண்புழுக் குளியல் நீர். அதற்கு ஆங்கிலத்தில் வெர்மிவாஷ் என்ற பெயர் உள்ளது.

பெரிய மண்பாணை (அ) பிளாஸ்டிக் பேரல்களைத் தேர்ந்தெடுத்து அதன் அடியில் சிறு துளைகள் மூன்று (அ) நான்கு இட வேண்டும். இதன் மூலம் நீர் வடியும் வண்ணம் செய்ய முடியும். அதில் 10 செமீ உயரத்தில் கூழாங்கற்கள், மணல் நிரப்ப வேண்டும்.

இதில் நன்றாக மக்கிய பண்ணைக்கழிவுகள், மாட்டு எருவை பேரல்களில் மேல் பகுதி வரை நிரப்ப வேண்டும். இதன் மேல் 500 மண்புழுக்களை விட வேண்டும். பிறகு பேரல் மேல் பகுதியில் ஒரு வாளியை வைத்து சிறு துளை ஏற்படுத்தி சொட்டு சொட்டாக தண்ணீர் விழுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

தினமும் 4-5 லிட்டர் நீர் வாளியில் ஊற்றப்பட வேண்டும். பத்து நாட்களுக்குப் பிறகு தினமும் 3-4 லிட்டர் வரை உற்பத்தி செய்யலாம். 1 லிட்டர் மண்புழு குளியல் நீரை 10 லிட்டர் நீரில் கலந்து அனைத்து வேளாண், தோட்டக்கலை பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கியாக தெளிக்கலாம்.

1 லிட்டர் மண்புழு குளியல் நீரை 1 லிட்டர் மாட்டு கோமியத்துடன் கலந்து பூச்சி விரட்டியாக பயிர்களுக்கு தெளிக்கலாம் என மு.சண்முகப்பிரியா, வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேலூர் தெரிவித்துள்ளார் .

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.